பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
28 05 2024 6 45
செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மக்களவைக்கான 7வது மற்றும் இறுதிக்கட்ட வாக்குப்பதிவுக்கான பிரச்சாரம் நாளை மறுநாளுடன் நிறைவடைகிறது.

2. தேர்தல்களின்போது அரசியல் கட்சிகள் அளிக்கும் வாக்குறுதிகள் முறைகேடான செயல் அல்ல என்று உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.

3. அரசு நிதியுதவி பெறும் சிறப்பு பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கும் சத்துணவு விரிவுபடுத்தப்படுவதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

4. அக்னி நட்சத்திரம் எனப்படும் கத்திரி வெயில் இன்றுடன் நிறைவடைகிறது.

5. பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் போட்டியில் ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டங்களில் இந்திய வீரர்கள் இன்று பங்கேற்க உள்ளனர்.

<<<<>>>>

மக்களவைக்கான 7வது மற்றும் இறுதிக்கட்ட வாக்குப்பதிவுக்கான பிரச்சாரம் நாளை மறுநாளுடன் நிறைவடைகிறது.

இத்தேர்தலுக்கனா பிரச்சாரம் 2 நாட்களில் நிறைவடைய உள்ளதால் வாக்குப்பதிவு நடைபெறும் 57 தொகுதிகளில் அரசியல் கட்சித்தலைவர்கள் மற்றும் வேட்பாளர்களின் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

மக்களவைக்கான தேர்தல் கடந்த மாதம் 19-ஆம் தேதி தொடங்கி, ஏழு கட்டங்களாக நடைபெற்று வருகிறது.

இதுவரை ஆறு கட்டத்தேர்தல்கள் முடிவடைந்துள்ளன.

ஏழாவது மற்றும் இறுதிக்கட்டத் தேர்தல் 8 மாநிலங்களில் அடங்கிய 57 தொகுதிகளில் வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்தத் தொகுதிகளில் நாளை மறுநாளுடன் பிரச்சாரம் முடிவடைய உள்ளதால் அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் வேட்பாளர்களின் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி இன்று மேற்குவங்க மாநிலத்தின் பல்வேறு இடங்களிலும், ஜார்கண்ட் மாநிலம் தும்கா விமான நிலைய மைதானத்திலும் நடைபெறும் தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டங்களில் பங்கேற்று உரையாற்ற உள்ளார்.

பிஜேபி தலைவர் திரு. ஜே.பி. நட்டா, இன்று தியோகர் என்ற இடத்தில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகிறார்.

காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. ராகுல் காந்தி, இதேபகுதியில் நாளை மறுநாள் உரையாற்ற உள்ளார்.

இதற்கிடையே அடுத்த மாதம் 4-ஆம் தேதி நடைபெறவுள்ள வாக்கு எண்ணிக்கைக்கான முன்னேற்பாடுகள் குறித்து, தலைமை தேர்தல் ஆணையர் திரு. ராஜீவ் குமார் நேற்று காணொலி வாயிலாக ஆலோசனை மேற்கொண்டார்.

வாக்கு எண்ணிக்கையின் போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள், வாக்கு எண்ணும் மையங்களின் பாதுகாப்பு ஏற்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

இதில் தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திரு சத்யபிரத சாஹூ மற்றும் உயரதிகாரிகள் பங்கேற்றனர்.

<<<<>>>>

விவசாயிகள் நலனுக்காக மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியுள்ளதாக பிஜேபி மூத்த தலைவர்களில் ஒருவரான திரு அமித் ஷா கூறியுள்ளார்.

உத்தரப்பிரதேசத்தின் குஷி நகரில் நேற்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு அவர் பேசினார்.

கரும்பு விவசாயிகளுக்கான நிலுவைத்தொகை முழுமையாக விடுவிக்கப்பட்டதாகவும், மூடப்பட்டிருந்த சர்க்கரை ஆலைகள் திறக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

மக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் வகையில், பிரதமர் திரு நரேந்திர மோடி செயல்பட்டு வருவதாகவும் திரு அமித் ஷா கூறினார்.

<<<<>>>>

இளையோர் நலனுக்கான ஐந்து உத்தரவாதங்கள் காங்கிரஸ் தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ளதாக அக்கட்சியின் முன்னாள் தலைவர் திரு ராகுல்காந்தி கூறியுள்ளார்.

பீகாரில் நேற்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசிய அவர், கூடுதல் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும் என்றார்.

மத்தியில் காங்கிரஸ் ஆட்சிப்பொறுப்பேற்றால் ஏழைகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

மக்களவைத் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி வெற்றிபெறும் என்றும் திரு ராகுல்காந்தி நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<>>>>

தேர்தல்களின்போது அரசியல் கட்சிகள் அளிக்கும் வாக்குறுதிகள் முறைகேடான செயல் அல்ல என்று உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.

கர்நாடக சட்டப்பேரவைத் தேர்தலில் வேட்பாளர் ஒருவரின் வெற்றியை எதிர்த்து வாக்காளர் ஒருவர் தாக்கல் செய்த மனுவை அம்மாநில உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின்கீழ், அரசியல் கட்சி வேட்பாளர்கள் அளிக்கும் வாக்குறுதிகளை முறைகேடான செயலாகக் கருத முடியாது என உயர்நீதிமன்றம் தெரிவித்திருந்தது.

இதனை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனுவை விசாரித்த உச்சநீதிமன்ற நீதிபதிகள் சூரியகாந்த், விஸ்வநாதன் ஆகியோர் அடங்கிய அமர்வு, மனுதாரரின் வாதத்தை ஏற்க முடியாது என்று தெரிவித்தது.

பொதுமக்களுக்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ நிதி உதவி அளிக்க வழிவகை செய்யும் அரசியல் கட்சிகளின் வாக்குறுதிகள், அந்த கட்சியின் வேட்பாளர், முறைகேடான செயலில் ஈடுபடுவதற்கு வழிவகுக்கும் என்பதையும் நீதிபதிகள் ஏற்க மறுத்து மனுவை தள்ளுபடி செய்தனர்.

<<<<>>>>

அரசு நிதியுதவி பெறும் சிறப்பு பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கும் சத்துணவு விரிவிபடுத்தப்படுவதாக மாநில மாற்றுத்திறனாளிகள் நலத்துறை தெரிவித்துள்ளது.

மாற்றுத்திறனாளிகள் நலத்துறை இயக்குநர் திருமதி லட்சுமி, சமூக நலத்துறை ஆணையருக்கு அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதன்படி அரசு நிதியுதவி பெறும் 193 தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் சிறப்பு பணிகள் மற்றும் ஆரம்ப பயிற்சி மையங்களில் பயிலும் 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்கும் திட்டம் விரிவுபடுத்தப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு ஆகும் கூடுதல் நிதியான 15 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய்க்கு நிர்வாக அனுமதி வழங்கப்படுவதாகவும் திருமதி லட்சுமி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

அக்னி நட்சத்திரம் எனப்படும் கத்திரி வெயில் இன்றுடன் நிறைவடைகிறது.

இந்த ஆண்டு கடந்த 4ஆம் தேதி கத்திரி தொடங்கிய சில தினங்களுக்கு மாநிலத்தின் பல்வேறு நகரங்களிலும் 100 டிகிரி பாரன்ஹீட்டை தாண்டி வெப்பம் பதிவானது.

ஆனால் அடுத்த சில நாட்களில் மாநிலத்தின் பெரும்பாலான நகரங்களில் கோடை மழை பதிவானதால் கத்திரி வெயிலின் தாக்கம் குறைந்தே காணப்பட்டது.

இருந்தாலும் அடுத்த சில தினங்களுக்கு வெயிலின் நீடிக்கும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

<<<<>>>>

தமிழகம் மற்றும் புதுச்சேரியிலும், காரைக்கால் பகுதியிலும் அடுத்த 5 நாட்களுக்கு மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மாநிலத்தின் ஒருசில இடங்களில் நேற்று பரவலாக மழை பெய்துள்ளது.

வெப்பநிலையைப் பொறுத்தவரை அடுத்த 3 நாட்களுக்கு தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்காலில் 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை படிப்படியாக உயரக்கூடும் என்று வானிலை மைய அறிக்கை தெரிவிக்கிறது.

மாநிலத்தின் கடலோரப் பகுதியான குமரிக் கடல் மற்றும் மன்னார் வளைகுடா பகுதியில் வரும் 31ஆம் தேதி வரை மணிக்கு 35 முதல் 55 கிலோ மீட்டர் வரையிலான வேகத்தில் சூறாவளிக் காற்று வீசக்கூடும் என்றும் அந்த மையம் வெளியிட்ட அறிக்கை தெரிவிக்கிறது.

இதனிடையே இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை இயல்பைவிட கூடுதலாக இருக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையத்தின் தலைமை இயக்குனர் திரு **Mrutyunjay Mohapatra** கூறியுள்ளார்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

யுக்ரைனுக்கு இந்த ஆண்டு ஒரு பில்லியன் யூரோ மதிப்பிலான ராணுவ உதவி வழங்குவதற்கான ஒப்பந்தம், அந்நாட்டு அதிபர் திரு. **Volodymyr Zelenskiy - ஸ்**பெயின் பிரதமர் திரு. **Pedro Sanchez** இடையே நேற்று கையெழுத்தானது.

--------------

காஸா பகுதியில் எந்தவொரு போர்நிறுத்தம் அல்லது பிணைக் கைதிகளை பரிமாறிக்கொள்வதற்கான ஒப்பந்தம் குறித்த பேச்சுவார்த்தையில் பங்கேற்க மாட்டோம் என்று ஹமாஸ் அமைப்பு அறிவித்துள்ளது.

--------------

அமெரிக்காவின் டெக்சாஸ் உள்ளிட்ட மத்திய மாகாணங்களில் ஏற்பட்ட கடுமையான சூறாவளிக் காற்றில் சிக்கி 20 பேர் உயிரிழந்தனர். ஏராளமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

--------------

லித்துவேனியா அதிபர் தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் அதிபராக தேர்வு செய்யப்பட்டுள்ள **Gitanas Nauseda**-க்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

--------------

திருப்பத்தூர் மாவட்டத்தில் பட்டா மாறுதல் கோரி அளிக்கப்பட்டுள்ள மனுக்கள் மீது உடனடி தீர்வு காண்பதற்கான சிறப்பு முகாம்களை மாவட்ட ஆட்சியர் திரு. தர்ப்பகராஜ் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

--------------

கரூர் மாவட்டத்தில் விவசாயிகளின் பயன்பாட்டுக்காக கூட்டுறவுத்துறை மூலம் வாங்கப்பட்டுள்ள ட்ரோன்களின் செயல் விளக்கம், மாவட்ட ஆட்சியர் திரு. தங்கவேல் முன்னிலையில் செய்து காண்பிக்கப்பட்டது.

--------------

நெல்லை மாவட்டம் மணிமுத்தாறு அருவியில் சுற்றலாப் பயணிகள் இன்று முதல் குளிக்க அனுமதி அளிக்கப்படுவதாக வனத்துறை அறிவித்துள்ளது.

--------------

ஜோலார்பேட்டை அருகே அச்சமங்கலம் பகுதியில் விவசாயி ஒருவரின் நிலத்தில் மர்ம பொருள் விழுந்ததில் ஐந்தடி ஆழத்திற்கு பள்ளம் ஏற்பட்டது. இதனை பார்வையிட்ட மாவட்ட அறிவியல் துறை அலுவலர்கள், அங்கிருந்து சாம்பல் போன்ற பொருளை ஆய்வுக்காக எடுத்துச் சென்றனர்.

--------------

ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் அருகேயுள்ள கரும்பாறை பகுதியில் சிறுத்தை நடமாட்டம் இருப்பதால் பொதுமக்கள் பாதுகாப்பாக இருக்குமாறு வனத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

--------------

உயர்கல்வித்துறையில் தமிழகம் முதன்மை மாநிலமாக திகழ்கிறது என்று மாநில அரசு கூறியுள்ளது.

--------------

தருமபுரி மாவட்டம் அரூர் அருகேயுள்ள வள்ளிமதுரை அணையின் நீர்மட்டம் தொடர் கோடை மழையால் வேகமாக நிரம்பி வருகிறது.

இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்திருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

--------------

*விளையாட்டுச் செய்திகள்*

பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் போட்டியில் ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டங்களில் இந்தியாவின் ரோஹன் போபன்னா, யூகி பாம்ரி ஆகியோர் இன்று பங்கேற்க உள்ளனர்.

பாரீசில் நடைபெறும் இப்போட்டியில் ரோஹன் போபன்னா – ஆஸ்திரேலியாவின் மாத்யூ எப்டன் இணை, ஃபின்லாந்தின் **Emil Ruusuvuori** – ஹங்கேரியின் **Marton Fucsovics** இணையை எதிர்கொள்கிறது.

இதேபோல் யூகி பாம்ரி – பிரான்சில் **Albano Olivetti** இணை – ரஷ்யாவின் **Roman Safiullin** – ஆஸ்திரேலியாவின் **John Peers** இணையை எதிர்கொள்கிறது.

நேற்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் சுமித் நாகல் - ரஷ்யாவின் **Karen Khachanov**-விடம் தோல்வியடைந்து வெளியேறினார்.

----------------

உஸ்பெகிஸ்தானுக்கு எதிரான இரண்டு நட்புணர்வு மகளிர் கால்பந்து போட்டியில் பங்கேற்பதற்கான 23 கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

முதலாவது போட்டி வரும் 31-ஆம் தேதியும், இரண்டாவது போட்டி அடுத்த மாதம் 4-ஆம் தேதியும் நடைபெறவுள்ளது.

-----------------

உலக பாரா தடகள சாம்பியன் போட்டிகளில் இந்திய வீரர் - வீராங்கனைகளின் பங்களிப்பு மகிழ்ச்சியளிப்பதாக உள்ளது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

சமூக வளைதலத்தில் இதைப் பதிவிட்டுள்ள அவர், கடந்த 7 ஆண்டுகளில் 34வது இடத்தில் இருந்து 6வது இடத்திற்கு முன்னேறி இருப்பதுடன், 17 பதக்கங்களை வென்றிருப்பது பாராட்டுக்குரியது என்று குறிப்பிட்டுள்ளார்.

**<<<<The End>>>>**